OS:269/2019

Date: 24.06.2025

பெயர் : வெங்கடேசன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி** 1.

<u>**குறுக்கு விசாரணை**</u> :-

நான் விவசாய தொழில் செய்து வருகிறேன் . நான் வழக்குரையில் சொல்லியுள்ள முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன் . வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும் . நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் தெரியும். வாதி என்னுடைய பக்கத்து நிலத்தை சேர்ந்தவர் தான். எனக்கு 16 ஏக்கர் நிலம் பாத்தியம். வாதிக்கு எத்தனை ஏக்கர் நிலம் பாத்தியம் என்று தெரியாது . என்னுடைய சொத்தை 1968 ஆம் ஆண்டு என்னுடைய தகப்பனார் மாரப்ப கவுண்டர் தான் விலைக்கு வாங்கினார். என்னென்ன சர்வே எண்களில் கிரயம் பெற்றார் என்று தெரியும் . சர்வே எண்.385/2 ல் ஏக்கர் 6.70 கிரயம் வாங்கியுள்ளார். சர்வே எண்.387/2 ல் 47 செண்ட் கிரயம் வாங்கியுள்ளார். சர்வே எண்.387/2 சொத்துக்கு செக்குபந்தி சர்வே எண் .387/1, 2 க்கு வடக்கு, சர்வே எண்.386 க்கு மேற்கு, சர்வே எண்.380 ரோடுக்கும் கிழக்கு, சர்வே எண்.385/1, 2 க்கு தெற்கு இதன் மத்தியில் 47 செண்ட் நிலத்தை என் தகப்பனார் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் இதில் புருவம்பட்டி ரோட்டிலிருந்து 385/1 ஏ வழியாக கிழபுறம் 1723 X 20 லிங்ஸ் ஒரு பாதையும் 745 X 20 வடபுறம் ஒரு பாதையும் விட்டு விட வேண்டியது மேற்கண்ட கிரயம் பாகம் சப்டிவிசன் காலத்தில் கம்மி ஜாஸ்தி ஏற்பட்டாலும் மேற்படி செக்குபந்திக்குள் அடங்கிய பாகம் தான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . 46 செண்ட் முழுவதும் தடமாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. 46 செண்ட் முழுவதும் தடம்

என்று தான் பி.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக நான் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . மேற்சொன்ன தடம் சம்மந்தமாக என்னுடைய தகப்பனார் மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான் . மேற்சொன்ன வழக்கு ஓமலூரில் நீதிமன்றம் ஆரம்பித்தபிறகு ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் மாரப்ப கவுண்டர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு எண் .112/1996 என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை தான் வா .சா.ஆ.13. அ.வ.எண்.112/1996 வழக்குரை சொத்து விவரத்தில் எ, பி, சி, டி, இ, எப், ஜி, எச், ஐ, ஏ, என்று குறிக்கப்பட்ட தடத்தில் பிரதிவாதிகளுக்கு தங்கள் நிலங்களுக்கு வண்டி , வாகனாதிகள் எடுத்துச் செல்லும் பாத்தியம் மட்டும் தான் உண்டு என கூறியுள்ளார் என்றால் அவ்வாறு நடைமுறை இல்லை . என் தகப்பனார் மேற்சொன்னவாறு வழித்தடத்தை குறிப்பிட்டு வழக்கு 24.03.1997 ஆம் தேதி தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை , நடைமுறையிலும் இல்லை. வா.சா.ஆ.14 ல் மேற்சொன்ன வழித்தடத்தில் பிரதிவாதிகளுக்கு வண்டி , வாகனாதிகள் எடுத்துச் செல்லும் பாத்தியம் உண்டு என சொல்லப்பட்டுள்ளது என்றால் நடைமுறையில் இல்லை . மேற்சொன்ன வழிப்பாதையை வாதி பயன்படுத்துவதை நான் தடுக்கவே முடியாது என்றால் அந்த நிலத்தில் தென்னை மரங்கள் உள்ளது . விவசாயம் பார்த்து கொண்டு வருகிறேன் . தென்னை மரங்கள் உள்ளது என்பதற்கும் , விவசாயம் பார்த்து வருகிறேன் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் விவசாயம் செய்துகொண்டுதான் உள்ளேன். வாதிக்கு வழி விடக்கூடாது என்பதற்காகவே என்னுடைய ஆவணத்திற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அப்படி இல்லை. வா.சா.ஆ. 8 ல் சர்வே

எண்.387/2 ஏ நிலம் அ - பதிவேட்டில் பொதுப்பாதையாகதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்